විදේශ කටයුතු, විදේශ රැකියා සහ සංචාරක අමාත්‍යාංශය

**வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு**

**MINISTRY OF FOREIGN AFFAIRS, FOREIGN EMPLOYMENT AND TOURISM**


**ஊடக வெளியீடு**

# வெளிநாட்டு அமைச்சர் விஜித ஹேரத் ஐக்கிய அரபு அமீரகத்திற்குப் பயணம்

வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத், 2026 செப்டம்பர் 2 முதல் 3 வரை ஐக்கிய அரபு அமீரகத்திற்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொள்ளவுள்ளார். இப்பயணத்தின் போது, இலங்கைக்கும், ஐக்கிய அரபு அமீரகத்திற்கும் இடையிலான இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் மேம்படுத்தும் நோக்கில், பரஸ்பர நலன் சார்ந்த விடயங்கள் குறித்து ஆலோசிப்பதற்காக, ஐக்கிய அரபு அமீரகத்தின் மனிதவளம் மற்றும் அமீரகமயமாக்கல் அமைச்சர் கலாநிதி அப்துல்ரஹ்மான் அப்துல்மன்னான் அல் அவார் மற்றும் பொருளாதாரம் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் அப்துல்லா பின் தௌக் அல் மரி உள்ளிட்ட பல முக்கிய அமைச்சர்களை அமைச்சர் ஹேரத் சந்திப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

செப்டம்பர் 2 ஆம் திகதி, அமைச்சர் ஹேரத், ஐக்கிய அரபு அமீரகத்தின் வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் கலாநிதி தானி பின் அகமது அல் ஜயூதியுடன் இணைந்து, துபாயில் நடைபெறும் “Sri Lanka Beyond Your Dreams”, நிகழ்வின் இரண்டாவது பதிப்பில் கலந்துகொள்ளவுள்ளார்.

**வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு**
**மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு**
**கொழும்பு 01**

**2026 செப்டம்பர் 02**


| | | | |
|---|---|---|---|
| **Foreign Affairs**<br>විදේශ කටයුතු<br>வெளிநாட்டு அலுவல்கள் | **Republic Building, Colombo 1**<br>ජනරජ ගොඩනැගිල්ල, කොළඹ 1<br>குடியரசுக் கட்டிடம், கொழும்பு 1 | ☎ 2 325 373/5, 2 207 200/7 | cypher@mfa.gov.lk |
| **Foreign Employment**<br>විදේශ රැකියා<br>வெளிநாட்டு வேலைவாய்ப்பு | **17th Floor, "Mehewara Piyesa", Narahenpita, Colombo 5**<br>17 වන මහල, "මෙහෙවර පියස", නාරාහේන්පිට, කොළඹ 5<br>17 அவது தளம், "மெஹெவர பியெச", நாரஹேண்பிட்டி, கொழும்பு 5 | ☎ 2 331 200 | info@mfe.gov.lk |
| **Tourism**<br>සංචාරක<br>சுற்றுலாத்துறை | **No 03, Times Building, Bristol Street (Sir Razik Fareed Mw), Colombo 1**<br>අංක 03, ටයිම්ස් ගොඩනැගිල්ල, බ්‍රිස්ටල් වීදිය (සර් රාසික් ෆරීඩ් මාවත), කොළඹ 1<br>இல.03, டைம்ஸ் கட்டிடம், பிரிஸ்டல் தெரு (சர் ராசிக் ஃபரீத் மாவத்தை), கொழும்பு 1 | ☎ 2 381 798, 2 321 222 | secretary@tourismmin.gov.lk |